செ.வெ.எண்: 25 / ஜீன் / 2021 நாள்: 07.06.2021

**கொரோனா நோய்ப் பெருந்தொற்று இரண்டாம் அலை பரவுதலைத் தடுத்தல் மற்றும் உதவுதல் தொடர்பாக தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடனான ஆலோசனைக் கூட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று(07.06.2021) நடைபெற்றது.**

------------

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில், கொரோனா நோய்ப் பெருந்தொற்று இரண்டாம் அலை பரவுதலைத் தடுத்தல் மற்றும் உதவுதல் தொடர்பாக தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று(07.06.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆலோசனைகளை வழங்கிப் பேசியதாவது:

தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட மாநில மற்றும் மாவட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்புக் குழுவின் இணையதள முகவரியில் ***https://ucc.uhcitp.in/ngoregistration*** தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் ஒரு முறை மட்டும் பதிவு மேற்கொள்ள வேண்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பதிவுகளை மேற்கொள்வதைத் தவிர்த்திடவும், ஒன்றுக்கும் மேற்பட்ட பதிவுகளை நீக்கம் செய்திடவும் வேண்டும்.

ஒருங்கிணைப்புக் குழு இணையதள முகவரியில் பதிவினை மேற்கொள்ளும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் சரியான தொலைபேசி எண்ணைப் பதிவு செய்ய வேண்டும். மேலும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் இணையத்தில் பதிவு செய்துள்ள சேவைகளை உடனடியாக எவ்விதத் தாமதமுமின்றி செய்து முடிக்க வேண்டும்.

ஆக்சிஜன் தயாரிக்கும் பணிகளுக்கு தொண்டு நிறுவனங்கள் உதவிட முன்வர வேண்டும். கொரோனா காலத்தில் வறுமையில் வாடுவோர், முதியோர், ஆதரவற்றோர், வேலைவாய்பற்றோர் உள்ளிட்டவர்களுக்கு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கி உதவிட வேண்டும். கொரோனா காலத்தில் சிறப்பாகப் பணியாற்றி உதவிடும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பங்களிப்பு வழங்குவதாக தெரிவித்துள்ள பொருள்களை ஒருங்கிணைப்புக் குழு அலுவலர் தெரிவிக்கும் அலுவலரிடம் பொருட்களை ஒப்படைத்திட வேண்டும். தொண்டு நிறுவனங்கள் பொருட்கள் ஒப்படைப்பு செய்த விபரத்தினையும் பொருட்களை பெற்றுக் கொண்ட அலுவலர்கள் பொருள்களை பெற்றுக் கொண்ட விபரத்தினையும் ஒருங்கிணைப்புக் குழு அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும். அதன் பின்னர் இணையத்தில் பொருட்கள் ஒப்படைப்பு செய்யப்பட்ட விபரம் பதிவேற்றம் செய்யப்படும்.

இணையத்தில் பதிவு மேற்கொள்வது தொடர்பான சந்தேகங்களுக்கு 0431-2418995, 0431-2461240, 0431-2461245, 0431-2461243 மற்றும் 0431-2461263 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு தெளிவுரை பெற்று பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் வழங்கியுள்ள பங்களிப்பு விபரத்தினை ஒருங்கிணைப்பு குழு அலுவலர் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவரின் அனுமதி பெற்று விளம்பரம் செய்திட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் பேசினார்.

முன்னதாக பத்மஸ்ரீ விருது பெற்ற ஸ்கோப் தன்னார்வ தொண்டு நிறுவனர் திரு.சுப்புராமன் அவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பாராட்டினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.த.பழனிகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) செல்வி ச.ஜெயப்பிரித்தா, மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.தமீம்முனிஷா மற்றும் அலுவலர்கள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**